இந்திய உச்ச நீதிமன்றம்

2021 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 22 ஆம் நாள்

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் திரு .இந்து மல்ஹோத்ரா மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. அஜய் ரஸ்தோகி

(உரிமையியல் மேல்முறையீட்டு எண்.692 /2021)

ஜிஆர் கிரீன் லைப் எனர்ஜி பிரைவேட் லிமிடெட்

எதிர்

லெய்ட் லின்ட் ஸ்ரீராம் உற்பத்தி பிரைவேட் லிமிடெட்

நடுவர் மற்றும் சமரசச்சட்டம், 1996 – மேல்முறையீட்டாளர் - ஒப்பந்ததாரர் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளர் ஒரு காற்றாலை திட்டத்தை அமைப்பதற்கான ஒப்பந்தத்தை மேற்கொண்டார். ஒப்பந்தத்தில் ஒரு நடுவர் விதி (பிரிவு 20)ல் உள்ளடக்கியது - இரு தரப்பினருக்கும் இடையே உள்ள தகராறுகள் - எதிர்மேல்முறையீட்டாளர் ஒப்பந்தத்தின் நடுவர் விதி 20வது பிரிவின் கீழ் நடுவர் மன்றத்தை அணுகி, நடுவரை நியமித்தார் - மேல்முறையீட்டாளரிடம் நடுவர் ஒருவரை நியமிக்க பரிந்துரைக்குமாறு வேண்டுகோள் விடுத்தது - மேல்முறையீட்டாளர் நடுவரை நியமிக்க தவறிவிட்டார் - அதை தொடர்ந்து எதிர்மேல்முறையீட்டாளர் உயர்நீதிமன்றத்தில் பிரிவு 11(6) 1996 சட்டத்தின் படி மனு தாக்கல் செய்து, மேல்முறையீட்டாளருக்கு நடுவரை நியமிக்குமாறு விதி 20 ஒப்பந்தத்தின் கீழ் கோரினார் - ஒப்பந்தத்தின்படி விதி 20ன் கீழ்

மேல்முறையீட்டாளர் சார்பாக நடுவர் 1996ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் அனைத்து சண்டைச் சச்சரவுகளையும், முன் வைக்க தரப்பினர்கள் ஒப்புக்கொண்டுள்ளதால் நடுவரை நியமிப்பதற்கு இது பொருத்தமான வழக்கு என்று உயர்நீதிமன்றம் முடிவு செய்து, மூன்று பேர் கொண்ட நடுவர் மன்றத்திற்கு வழங்கப்பட்ட ஒப்பந்தம் - எதிர்மேல்முறையீட்டாளர் ஏற்கனவே நடுவரை நியமித்துள்ளதால், மேல்முறையீட்டாளர் ஒரு நடுவரை நியமிக்குமாறு அறிவுறுத்தப்பட்டார் - மேலும் அவ்வாறு நியமிக்கப்பட்டவுடன் இரண்டு நடுவர்களும், தலைமை நடுவரை நியமிக்கவும் அறிவுறுத்தப்பட்டார் - உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீட்டாளர் - ஒப்பந்ததாரர் - உச்சநீதிமன்றத்தின் விசாரணையின்போது, நடுவர் மற்றும் சமரசச் சட்டம் 1996ன் கீழ் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட தனி நடுவர் மூலம் தகராறுகளுக்கு தீர்வு காண்பதற்கு தரப்பினர்கள் ஏற்றுக்கொள்ள ஒப்புக்கொண்டனர் – அதன்படி உச்சநீதிமன்றம், சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியை தனி நடுவராக நியமித்தது.

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு: உரிமையியல் மேல்முறையீடு எண்.692/2021

சென்னை உயர்நீதிமன்றம், அசல் மனு எண்.300/2019ல் 16.09.2020 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவின் படி,

செல்வி.ஸ்வேதா ஷர்மா, திக்காஜ் பதக், ரவி ரகுநாத், செல்வி.ஆகாஷிலோதா, சன்யாத் லோதா தரப்பினர்களின் சார்பாக முன்னிலையாகும் வழக்கறிஞர்கள்

கீழ்க்கண்டவாறு நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

உத்தரவு

அனுமதி வழங்கப்பட்டது.

1. இந்த உரிமையியல் மேல்முறையீடானது மேல்முறையீட்டாளர் - ஒப்பந்ததாரரால் சென்னை உயர்நீதிமன்ற அசல் மனு எண்.300/2019ல் 1996ஆம் ஆண்டின் நடுவர் மற்றும் சமரசச் சட்டம் பிரிவு 11ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது 16.09.2020 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளர் இருவரும் 10.02.2014 அன்று மஹாராஷ்டிரா, சாங்லி மாவட்டத்தில் காற்றாலை திட்டத்தை அமைப்பதற்காக வளர்ச்சி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். அதில் நடுவர்மன்ற கூறுகள் அடங்கியுள்ளது. ஒப்பந்த கூறு 20ல் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

"20. ஆளுமை சட்டம் மற்றும் அதிகார வரம்பு மற்றும் செயல்முறை சேவை.

"திட்டப்பணிகள் தொடர்பான அனைத்து சர்ச்சைகள், வேறுபாடுகள் மற்றும் உரிமை கோரல்கள், திட்டப்பணிகள் அமைப்பதற்கான தொகைகளை கொடுக்காதது மற்றும் இதன் மூலமாகவோ அல்லது இது தொடர்பாக எழும் பிரச்சனைகள் அனைத்தையும் நடுவர் மற்றும் சமரசச் சட்டம் 1996ன் படி நடுவர், சென்னைக்கு பரிந்துரைக்கப்படும் (அவ்வபோது அமுலுக்கு வரும்). நடுவர் குழு மூன்று நடுவர்களை கொண்டிருக்கும். ஒவ்வொரு தரப்பினராலும் ஒரு நடுவர் நியமிக்கப்படுவர். அவ்வாறு நியமிக்கப்பட்ட நடுவர்கள் தலைமை நடுவரை நியமிப்பார்கள். நடுவர் தீர்ப்பாயத்தில் பிறப்பிக்கும் ஏதேனும் இடைக்காலத் தீர்வம் அல்லது வழிகாட்டுதல்களை தரப்பினர்கள் கடைப்பிடிக்கவேண்டும். மேலும் நடுவர் மன்றத்தின் தீர்ப்பு இறுதியானது மற்றும் தரப்பினர்களை கட்டுப்படுத்தும். நடுவர்மன்ற நடவடிக்கைகள் ஆங்கில மொழியில் இருக்க வேண்டும்.

3. மேல்முறையீட்டாளர் - ஒப்பந்ததாரரால் எழுப்பப்பட்ட உரிமை கோரல்கள் தொடர்பாக தரப்பினர்களுக்கு இடையே தகராறு எழுந்ததால். 21.04.2018 தேதியிட்ட சட்ட அறிவிப்பின் மூலம் நிலுவை தொகை ரூ.3,26,08,545/- செலுத்துவதற்கு கோரப்பட்டது.

4. எதிர் மேல்முறையீட்டாளர் 21.01.2019 தேதியிட்ட கடிதத்தின் மூலம், அறிவிப்பில் கண்டுள்ள சாட்டுரைகளை நிராகரித்தது. மேலும், வளர்ச்சி ஒப்பந்தத்தின் கீழ் ஒப்புக்கொள்ளப்பட்ட சேவைகளை வழங்க ஒப்பந்ததாரர் தவறிவிட்டார் என்று வாதிட்டார். மேலும், மேல்முறையீட்டாளர் - ஒப்பந்ததாரர் ரூ.10,26,00,000/-மும் மற்றும் 15 சதவிகித வட்டியுடன் திருப்பி செலுத்த கடமைப்பட்டவர் மற்றும் அறுதியிடப்பட்ட இழப்பீடு ரூ.1,54,00,000/-யை எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு கொடுக்க வேண்டும் எனவும் வாதிடப்பட்டது.

எதிர்மனுதாரர் ஒப்பந்தத்தின் உட்கூறு 20ன் படி நடுவர் மன்றத்தை அனுகி, நடுவரை நியமித்துள்ளார். மேல்முறையீட்டாளர் சார்பாக நடுவர் ஒருவரை நியமிக்க வேண்டுகோள் விடுத்தார்.

5. 18.03.2019 அன்று இந்த எதிர்மனுதாரர் 1996 சட்டத்தின்படி பிரிவு 11(6)ன் கீழ் சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு மனுவை தாக்கல் செய்து, அதில் கூறு 20 வளர்ச்சி ஒப்பந்தப்படி, மேல்முறையீட்டாளர் சார்பாக நீதிமன்றம் ஒரு நடுவரை நியமிக்க வேண்டும் என்று கோரப்பட்டது. மேல்முறையீட்டாளர் - ஒப்பந்ததாரர் சார்பாக நடுவரை நியமிக்க தவறிவிட்டார்.

6. அதன் பிறகு, மேல்முறையீட்டாளர் - ஒப்பந்ததாரர் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் மேம்பாட்டுச் சட்டம் 2006 ("MSMED ACT") கீழ் தன்னை பதிவு செய்து, MSMED சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட பூனேவில் உள்ள வசதி கவுன்சில் முன்பு சர்ச்சைகள் தீர்ப்பதற்கான மனுவினை தாக்கல் செய்தார்.

7. இதற்கிடையில் பிரிவு 11ன் கீழான மனுவானது உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அதில் MSMED சட்டத்தின் கீழ் வசதி கவுன்சிலுக்கு எதிர் உரிமை கோரல்களைக் குறிப்பிடுவதற்கும் அதனை முடிவு செய்வதற்கும் எந்த விதியும் இல்லை என்றும் MSMED சட்டத்தின் பிரிவுகள் 15 முதல் 18 வரை MSMED சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சப்ளையர் - ஒப்பந்ததாரரால் செய்யப்படும் உரிமைகோரல்கள் தொடர்பான தகராறுகளைக் குறிப்பிடுகின்றன. MSMED சட்டத்தின் பிரிவு 24 MSMED சட்டத்திற்கு மேலான விளைவை அளித்தாலும், இந்தச் சட்டத்தின் கீழ் சப்ளையர் - ஒப்பந்ததாரருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட எதிர் உரிமைகோரல்களைக் கையாள்வதற்கு எந்த ஏற்பாடும் இல்லாததால், இந்த வழக்கிற்கு அது பொருந்தாது என தீர்வு காணப்பட்டது.

MSMED சட்டத்தின் கீழ் எதிர் உரிமைகோரல்களை எழுப்புவதற்கு எந்த ஏற்பாடும் இல்லாததாலும், 10.02.2014 தேதியிட்ட மேம்பாடு ஒப்பந்தத்தில் 1996 சட்டத்தின் கீழ் அனைத்து தகராறுகளையும் குறிப்பிடுவதற்கு தரப்பினர்கள் ஒப்புக்கொண்டதால், இது நடுவரை நியமிப்பதற்கு பொருத்தமான வழக்கு என்று உயர்நீதிமன்றம் கருத்து தெரிவித்தது. நடுவர் நியமனத்திற்காக நடுவர் ஒப்பந்தம் மூன்று பேர் கொண்ட தீர்ப்பாயத்திற்கு வழங்கப்பட்டது. விண்ணப்பதாரர் (எதிர்மனுதாரர்) ஏற்கனவே அதன் நடுவரை நியமித்திருந்தார். ஒப்பந்ததாரர் ஒரு நடுவரை நியமிக்குமாறு அறிவுறுத்தப்பட்டார். அவ்வாறு நியமிக்கப்படும் பட்சத்தில் அந்த இரண்டு நடுவர்கள் தலைமை நடுவரை நியமிப்பார்கள்.

8. மேல்முறையீட்டாளர் - ஒப்பந்ததாரர் 16.09.2020 தேதியிட்ட மேற்கூறிய உத்தரவை எதிர்த்து இந்த நீதிமன்றத்தின் முன் சிறப்பு விடுப்பு மனு (சி) எண்.16027/2020ஐ தாக்கல் செய்தார்.

மேற்படி நடவடிக்கைகளின் போது தரப்பினர்கள் தங்கள் சண்டை சச்சரவுகளை நடுவர் மற்றும் சமரசச் சட்டம், 1996ன் கீழ் நீதிமன்றம் நியமிக்கும் தனி நடுவர் மூலம் தீர்வு காண்பதற்கு ஒப்புக் கொண்டனர்.

இருதரப்பு வழக்கறிஞர்களின் உறுதிமொழி மற்றும் அறிவுறுத்தல்களின்படி 10.02.2014 தேதியிட்ட மேம்பாட்டு ஒப்பந்தத்தின் உட்கூறு 20 நீக்கப்பட்டு, மூன்று பேர் கொண்ட நடுவர்மன்றம் தீர்ப்பாயத்தில் நடத்தப்படும்.

10.02.2014 தேதியிட்ட வளர்ச்சி ஒப்பந்தத்தில் இருந்து எழும் தரப்பினர்களின் அனைத்து உரிமைகோரல்கள் மற்றும் எதிர் உரிமை கோரல்கள் மீது தீர்வு காண வேண்டி, சென்னை, உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியான நீதிபதி.கே.கண்ணனை நாங்கள் தனி நடுவராக நியமிக்கிறோம். நடுவர்மன்றமானது, நடுவர் மற்றும் சமரச சட்டம் 1996ன் படி நடத்தப்படும். நடுவர் மன்ற நடவடிக்கைகள், அதன் விதிகளின்படி சென்னை, உயர்நீதிமன்ற நடுவர் மையத்தால் நடத்தப்படும்.

தனி நடுவர் நியமனமானது, நடுவர் மற்றும் சமரசச்சட்டம் 1996ல் பிரிவு 12ன் கீழான விதிமுறைகளின்படி தனித்துவத்துடனும் மற்றும் பாரபட்சமற்ற தன்மையுடனும் நடத்திட உறுதியளிக்கவும் மற்றும் நடுவர் மன்றத்தை முடிக்க போதுமான கால அவகாசத்தை ஒதுக்கும் திறன் ஆகியவற்றின் கீழ் செயல்படவும், உறுதி அளித்திட வேண்டும். தனி நடுவர் கட்டணத்தை சென்னை, உயர்நீதிமன்ற நடுவர் மையத்தின் (நிர்வாக செலவு மற்றும் நடுவர் கட்டணம் விதி 2017) பட்டியலின்படி வழங்கப்பட வேண்டும்.

இந்த உத்தரவின் நகலை, சென்னை, உயர்நீதிமன்ற நடுவர் மையத்திற்கும், நீதிபதி.கே.கண்ணன் (ஓய்வு) அவர்களுக்கு பின்வரும் முகவரியில் அனுப்ப

வேண்டும்.

"நீதிபதி.கே.கண்ணன்
3-11, லட்சுமி காலனி,
வடக்கு கிரசன்ட், திநகர்,
சென்னை - 600017.
அலைபேசி - 91-9780008145"

9. மேற்கூறிய அறிவுறுத்தலின்படி MSMED சட்டத்தின் கீழ் மேல்முறையீட்டாளர் - ஒப்பந்ததாரர் தாக்கல் செய்த மனுவானது 22.10.2020 அன்று MSFEC வழக்கு எண்.MH/26/M/PNE/02000ன் பதிவு செய்யப்பட்ட வழக்கு பூனாவில் உள்ள வசதி குழுவால் முடிக்கப்படும்.

10. மேல்முறையீடானது மேற்கூறிய விதிமுறையின்படி முடிக்கப்படுகிறது. மனுக்கள் ஏதேனும் நிலுவையில் இருப்பின் அவையும் முடிக்கப்படுகின்றன.

மேல்முறையீடு முடிக்கப்பட்டது.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திகொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."